**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.14** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | நடராஜன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **23.01.2026**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 5வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் அரியலூர் மாவட்ட ஆண்டிமடம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 25.09.2023ம் தேதி மங்கலமேடு வட்ட ஆய்வாளராக இருந்தபோது வி.களத்தூர் காவல்நிலைய குற்ற எண்.67/2017வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவஇடம் சென்று பார்வையிட்டபோது ஏற்கனவே உதவிஆய்வாளர் திரு.சுரேஷ் பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்திருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. பின்பு சாட்சிகள் நல்லதம்பி, அழகுவேல், ராமர், அய்யாதுரை, தங்கம்மாள், அழகுதுரை, வடிவேல் மற்றும் பெரியசாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். சாட்சிகளை வாக்குமூலங்களின் அடிப்படையில் சட்டபிரிவை 147, 294(b), 325, 506(ii) இதச விலிருந்து 147, 148, 294(b), 120(b), 307 இதச வாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பிவைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10, சார்புஆய்வாளர் தயாரித்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ.11, புலன்விசாரணையின்

போது அ.சா.2, 3, 4, 5 ஆகியோர்கள் எதிரிகளையும் வழக்கு சம்பவத்தையும் இணைத்து கூறியுள்ளார்கள். நான் முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்த உதவி ஆய்வாளரை விசாரித்தேன். வாதியை சிகிச்சையில் அனுமதித்த மருத்துவர் விவேக், காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஹரிகரண் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இறுதியில் புலன்விசாரணை முடித்து 27.09.2023ம்தேதி குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு சம்பவம் 22.01.2017ம் தேதி நடந்துள்ளது. முதல்தகவல்அறிக்கை 03.03.2017ம் தேதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. சுமார் 40 நாட்கள் காலதாமதமாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை சட்டபிரிவுகள் 147, 294(b), 323, 506(i) இதசவாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றங்கள் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் திரு.சுரேஷ் முதலில் மனுவாக பதிவுசெய்து முதல்விசாரணை செய்து அதன்பின்னர் வழக்கு பதிவுசெய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு சார்புஆய்வாளர் முதல்விசாரணை செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கை காலம் எண்.3ல் பொதுநாட்குறிப்பில் முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்யப்பட்ட நேரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தனியாக முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்யவில்லை. குவிமுச பிரிவு 164ன் கீழான வாக்குமூலத்தை வேப்பந்தட்டை நீதித்துறை நடுவர் 07.05.2021ம் தேதி பதிவுசெய்துள்ளார். மேற்படி வாக்குமூலத்தில் புகாரில் உள்ளது தன்னுடைய கையெழுத்து இல்லையென்று அ.சா.1 கூறியுள்ளது குறித்து எனக்கு தெரியவந்தது. சம்பவஇடத்திற்கும் ராமநத்தம் காவல்நிலைய எல்லைக்கும் இடையே சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். எதிரிகளும் புகார்தாரரும் வடகரம்பூண்டியை சேர்ந்தவர்கள். சார்புஆய்வாளர் திரு. சுரேஷ் மீது மாவட்ட கண்காணிப்பாளர் துறைரீதியான நடவடிக்கை எடுத்துள்ளார். அ.சா.13 புலன்விசாரணையின் போது அ.சா.1,2ஐ விசாரித்துள்ளார். நான் மேற்படி சாட்சிகளை உதவிஆய்வாளர் மற்றும்

முந்தைய ஆய்வளார் விசாரித்தபின்பு 3வது முறையாக விசாரித்துள்ளேன். அ.சா.1ன் மறுவாக்குமூலத்தில் வலதுகாலிலோ, வலது கையிலோ எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி அழகுதுரை சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவஇடம் வந்ததாக புலன்விசாரணையின்போது கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 தன்னை கொலைசெய்ய எதிரிகள் சதிதிட்டம் தீட்டியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரிக்கவில்லை. நான் மருத்துவரிடம் ஆயுதத்தை காட்டி விசாரிக்கவில்லை. 1வது எதிரியின் மனைவி கலைவாணி தன்னை புகார்தாரும் மற்றும் அவருடைய வகையாறாவும் தன்னை அசிங்கமாக பேசி தாக்கி கொலைமிரட்டல் விடுத்ததாக கடலூர் மாவட்டம், ராமநத்தம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தற்கு அதற்கு CSR ரசீது வழங்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. சாட்சி அழகுதுரை நல்லதம்பியின் மகன் என்றால் சரிதான். சாட்சி தங்கம்மாள் அ.சா.1ன் மனைவி என்றால் சரிதான். புலன்விசாரணையின் போது எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இடையே சிவில் பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது தெரியவந்தது. நான் எதிரிகளை கைது செய்யவில்லை. நான் வழக்கை சரியாக புலன்விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிகள் குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டிருப்பதுபோன்று சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், முன்விரோதம் காரணமாக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு பின்னிட்டு குற்றப்பத்திரிக்கையை நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவஇடம் செல்லாமல் அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.